முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் மார்கழி மாதம் **01** திகதி முதல்

சோபகிருது வருடம் மார்கழி மாதம் **08** திகதி வரை

**(17.12.2023** ஞாயிறு முதல் **24.12.2023** ஞாயிறு வரை**)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமம் தழைக்க கலியினில்
   தனிப் பெருங் கருணையோடு
   ஆறுமுகப் பெருமானின் சக்தியாக
   அவதாரம் கொண்ட அரங்கனே
2. அரங்கனே உம்மை போற்றி
   அகத்திய மகரிஷியானும் வாரஆசி
   வரங்களென இந்தியா தமிழகத்தில்
   வருங்கால நிகழ்வாக பலனாக
3. பலனாக சோபகிருது சிலைதிங்கள்
   பாடிட முதல் திகதிமேல் அட்டமதிகதி வரை
   காலமதில் நடக்கும் பலனாக உரைப்பேன்
   காப்பதுதான் தமிழக எல்லைக்கு
4. எல்லைக்குப் பேரிடரே வந்தாலும்
   இணையிலா அரங்கன் தருமசக்தி
   வல்லமை கொண்டு காத்தருளும்
   வறுமை பசிபிணி கொடுமை
5. கொடுமை அணுகா காக்கும்
   குறிப்பாக இந்தியா தமிழகம்
   இடரென மழை வெள்ளமாக
   இயற்கை சீற்றமாக அணுகி

6. அணுகித் தாக்கம் காண்பது
அவசியம் காரணம் என்னவென
பேணவே மக்களும் அறியவே
புகலுவேன் அகத்தியன் விளக்கம்
7. விளக்கமாக கீழும் மேலுமான தலைமை
வினவிட மக்களை வஞ்சிக்கின்ற
வழக்கமான பதுக்கல் ஊழல்
வகையிலா அநீதி செயல்முறை
8. செயல்முறைகளை மாற்றியே
சுயநலமில்லா ஆளுமைபுரிய
தயவுடன் அதிகார வர்க்கங்களும்
தவறை உணர்ந்து திருந்தவே
9. திருந்தவே பஞ்சமகா சக்திகள்
தீவிரம் காட்டி எச்சரிக்க
வருந்தாது பேரிடரிலும் பதுக்கல்
வகையறியா தவறை தொடர்ந்தால்
10. தொடர்ந்தால் இழப்பு மிகுந்து
தேசமெல்லாம் காணாமல் போகும்
இடர் பேரிடராகி எல்லாம் முடிவுறும்
இனியேனும் உணர்ந்து மீண்டு தருமவழி வாரீர்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மார்கழி மாதம் **01**ம் நாள் **17.12.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **08**ம் நாள் **24.12.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கலியுகத்தினில் தர்மத்தை தழைக்க செய்து வளர்த்து காத்திடவே தனிப்பெருங் கருணையோடு முருகப்பெருமானின் சக்தி வடிவமாக வந்துதித்த ஆறுமுக அரங்க மகானே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானுமே இந்தியா தமிழகத்தில் வருங்கால பலனாக சோபகிருது வருடம் மார்கழி மாதம் **01**ம் நாள் **17.12.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **08**ம் நாள்

**24.12.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தமிழகத்தில் பேரிடரே வந்தாலும் அரங்க மகான் செய்யும் தன்னலமற்ற தருமத்தின் சக்தி வல்லமையோடு தமிழகத்தை காத்தருளுமப்பா. வறுமையும் பசியும் தேசத்தை அணுகாது காத்திடுமப்பா. குறிப்பாக இயற்கை பேரிடராக மழை அதிகமாக பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்பட இயற்கை பேரிடராக உருவாக காரணம் என்ன என்பதை மக்கள் அறிந்திட உரைக்கின்றேன் அகத்திய மகரிஷி யானுமே.

இத்தேசத்திலே மக்களை வஞ்சிக்கும் வகையிலே பதுக்கல் செய்தும் ஊழல் புரிந்தும் பற்பல அநீதிகளை செய்ததினாலே இயற்கையும் சீற்றமானதப்பா. ஆதலினாலே மக்களும் மக்களை ஆள்பவர்களும், பொறுப்பில் உள்ளவர்களும் தங்களது தவறான செயல் முறைகளை மாற்றிக் கொண்டு அவரவரும் தமது தவறுகளை உணர்ந்து திருந்தி வாழ்ந்திட வேண்டும் என உணர்த்திடவே நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்கின்ற பஞ்சமகா சக்திகளும் தீவிரம் காட்டி எச்சரிக்கை செய்கின்றதப்பா. ஆதலினாலே மாற்றிக் கொள்ள இயற்கையும் சாந்தம் அடைந்து மக்களுக்கு பாதுகாப்பாய் மாறிடுமப்பா. அவ்வாறு இல்லாமல் இயற்கை பேரிடரிலும் பதுக்கல், ஊழல் என தவறுகளை செய்திட்டால் இழப்புகள் தேசத்திலே அதிகமாகி தேசம் பாழாக நேரிடுமப்பா இனிமேலாயினும் உணர்ந்து தவறுகளில் இருந்து விடுபட்டு நல்வழி நடந்து தருமவழியில் வாருங்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–